2004 ஜூலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

5—

சட்டக் கல்லூரி

***51667—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியிலுள்ள ஆரணி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டக் கல்லூரி ஒன்றினைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அடுத்த கல்வியாண்டிலிருந்து அதனைச் செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலே ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். கேள்வியே எழவில்லை என்று சொன்னால், அப்படிச் சொல்லிவிட்டால், கேட்டதைக் கொடுக்கின்ற தர்மத் தாய் ஆட்சியிலே, வினா எழவில்லை என்று சொல்லி ஒரே வார்த்தையில் முடித்துவிட்டால் போதாது. எங்களைத் தேர்ந்தெடுத்த மக்கள் என்ன செய்தீர்கள் இந்தத் தொகுதிக்கு, சொல்லுங்கள் குறிப்பிட்ட அளவிற்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கின்றார்கள். அங்கே அரசுக் கல்லூரிகள் எதுவுமே கிடையாது. ஆரணித் தொகுதி பட்டு உற்பத்திக்குப் பெயர் பெற்ற ஊர்; அரிசி உற்பத்திக்குப் பெயர் பெற்ற ஊர். அந்த ஊரிலே ஏறத்தாழ 150 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் சும்மாவே கிடக்கிறது, ஆதனூர் என்ற

கிராமத்திலே, ஆற்காடு சாலையிலே. அதேபோல, சத்தியவிஜயநகரம் என்ற கிராமத்திலும் 100 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகவே, அங்கே எந்த அரசுக் கல்லூரியும் இல்லை என்பதால், இந்த ஆண்டு எப்படியாவது அம்மாவினுடைய ஆட்சியிலே, எதிரிகளுக்குக்கூட கொடுக்கின்ற இந்த ஆட்சியிலே, எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறேன். இதை மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் மறுபடியும் எனக்கு ஏதாவது நல்ல வார்த்தை சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதாவது ஒரு கல்லூரியைத்தான் கேட்கிறார்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேரார்வம் பாராட்டுதற்குரியது. 234 தொகுதிகளையும் தன் தொகுதிகளாகப் பாவித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து நலத் திட்ட உதவிகளும் செய்துகொண்டு வருகின்றார்கள். எனவே ஆரணித் தொகுதிக்கு புதிய சட்டக் கல்லூரி கொடுப்பதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், நம்முடைய இந்திய வழக்கறிஞர் மன்ற விதிகள் விதி 8—ன்படி மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரி தொடங்க முடியும். ஆரணியில் மாவட்ட நீதிமன்றம் இல்லை. இல்லாத பட்சத்தில் எப்படித் தொடங்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெமினி ராமச்சந்திரன். (குறுக்கீடுகள்) அவர் கேட்டால் நீதிமன்றம் கேட்பார்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் மாவட்ட நீதிமன்றம் இருக்க வேண்டும், விதி இருக்கிறது என்று சொல்கிறார். பக்கத்திலே இருக்கிற செய்யாறிலே அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கே மாவட்ட நீதிமன்றமே இல்லை. அப்படி ஒரு முன்னுதாரணம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜெமினி ராமச்சந்திரன், கலைக் கல்லூரி என்பது வேறு (குறுக்கீடுகள்) சட்டக் கல்லூரி என்பது வேறு, மருத்துவக் கல்லூரி என்பது வேறு.

2004 ஜூலை 26]

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: இல்லை, இல்லை, முன்னுதாரணத்திற்காக நான் சொல்கிறேன். மாவட்ட நீதிமன்றம் இல்லை, அந்த இடத்திலே அரசுக் கல்லூரி இருக்கிறது. எங்களுக்கு சட்டக் கல்லூரி அந்த இடத்திலே நீங்கள் தர வேண்டும், நீங்கள் அவசியம் அதற்கு ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டிலே எப்படியாவது அந்தச் சட்டக் கல்லூரி வருவதற்குண்டான மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜெமினி ராமச்சந்திரன், அமைச்சர் வைத்துக் கொண்டா செய்ய மாட்டேன் என்கிறார். என்ன விதிமுறை என்று அவர் சொல்லியிருக்கிறார். திரு. அரசன் (குறுக்கீடு)

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: ஏற்கெனவே சென்ற ஆண்டு கல்வி அமைச்சரிடத்திலேகூட நான் கலைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டேன். அப்போதே அங்கே தனியார் கல்லூரிகளுக்கு, அதற்கே இடம் இல்லை என்று சொல்லி விட்டார். மக்கள் அரசுக் கல்லூரி வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். ஆகவே எங்கள் ஆரணித் தொகுதிக்கு ஏதாவது ஒரு கல்லூரியை வழங்குவதுபற்றி அம்மாவுடன் கலந்து, நீங்கள் நல்ல முறையிலே எங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டக் கல்லூரி அவசியம் எங்கள் பகுதிக்கு வந்தால்—30 தொகுதிகளுக்கு நடுவிலே ஆரணி இருக்கிறது. ஆகவே, சட்டக் கல்லூரி வேண்டும் என்பதுபற்றி மறுபரிசீலனை செய்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய அண்ணன் ஜெமினியார் அவர்கள் இந்தத் தள்ளாத வயதிலேயும் சட்டம் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்று நினைக்கிறேன். ஆகவே அவருடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இரண்டு பேருக்குமே தள்ளாத வயதுதான். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி துவங்கப்பட வேண்டும் என்றால் ஏற்கெனவே நான் சொல்லியபடி இந்திய வழக்கறிஞர் மன்ற விதிகள் விதி 8—ன்படி

[2004 ஜூலை 26

மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரி தொடங்க முடியும். எனவே, மாவட்ட நீதிமன்றம் ஆரணியில் இல்லாத சூழ்நிலையில் அவர் இவ்வளவாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்ற ஒரு சூழ்நிலையில் அவருடைய கோரிக்கையை நிராகரிக்க இயலாது. எனவே, இந்த விதி 8-ஐ பிரத்தியேகமாகத் தளர்த்த முடியுமா என்று இந்திய Bar Council-லிடம் கருத்துக் கேட்டு நம்முடைய சட்டப் பல்கலைக்கழகம் மூலமாக எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

6—

திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர்

***32712–திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரிலுள்ள சிவன்கோயில், முருகன் கோயில் மற்றும் முத்துமாரியம்மன் திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர் மற்றும் திண்காரைத் தளம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரில் உள்ள (1) சிவன் கோயில் (2) முருகன் கோயில் போன்ற இத்திருக்கோயில்களுக்கு திண்காரைத் தளம் ரூ.25,000/– மதிப்பீட்டில் 10–9–2002–ல் போட்டு முடிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் பொதுமக்கள் நன்கொடை மூலம் எழுப்பப்பட்டு பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. (3) அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு திண்காரைத் தளம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க நன்கொடையாளர்கள் எவரும் முன்வராததால் இப்பணிகள் செய்ய இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.